# வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சி
# சேலம் மாவட்டம்

**ந.க.எண் : 672/2021/அ1** **நாள் : 01.06.2022**

## ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

சேலம் மாவட்டம், வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சி 2021–2022ம் ஆண்டு தூய்மை இந்தியா (SBM) திட்டத்தின் கீழ் கீழ்கண்ட வேலையினை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகிறது.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அங்கீகாரம் பெற்றவரால் **24.06.2022ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.** ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறைகளில் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், ஒப்பந்தபுள்ளி தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஓப்பந்தப்புள்ளி படிவங்களை 23.06.2022 பிற்பகல் 3.00 மணி வரை E–Token / Digital Signature card யை உபயோகித்து www.tenders.tn.gov.in என்ற இணையதளத்திலிருந்து தகவல்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தபுள்ளி கொடுப்பவர்கள் அட்டவணை கலம் எண் 4ல் காணும் விவரப்படியான முன்வைப்புத் தொகைக்கு **"செயல் அலுவலர் வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சி"** (**The Executive Officer, Valappadi Town Panchayat**) Vன்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து பெறப்பட்ட வங்கி வரைவோலையை (**DD/Banker Cheque**) முன் வைப்புத் தொகையாக இணைத்து 24.06.2022 **பிற்பகல் 3.00 மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு வந்து சேருமாறு** அனுப்ப வேண்டும். மேலும் **வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 24.06.2022ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று மாலை 3.30 மணிக்கு பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அங்கீகாரம் பெற்றவரால் நேரில் ஆஜராகி உள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 23.06.2022ம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணி வரையில் இப்பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. (இலட்சத்தில்) | முன் வைப்பு தொகை | ஒப்பந்தப் புள்ளி படிவம் விற்பனை வரி உட்பட | ஒப்பந்த தாரரின் தகுதி | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வாழப்பாடி பேரூராட்சி 1வது வார்டு வளம் மீட்பு பூங்காவில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 15.00 | 30000 | 6600 | Class I and Class II | 6 மாதங்கள் |

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. ஒப்பந்ததாரர்கள் இப்பேரூராட்சியில் 2022-2023 ஆம் ஆண்டிற்கு பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்களாக இருக்கவேண்டும்.
2. ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை செலுத்திய ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும், எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. செலுத்தப்படும் டேவணித் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்படமாட்டாது. டேவணித் தொகை ரொக்கமாகவோ, கேட்பு வரைவோலையாகவோ செலுத்தலாம்.
4. ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைக்குள் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், ஒப்பந்தப்புள்ளி தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி செயல் அலுவலர், வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சி என்ற முகவரியிட்டு கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்ததாரரின் முழு அஞ்சல் முகவரி இருக்க வேண்டும்.
5. ஒரே ஒரு ஒப்பந்தபுள்ளி வரப்படுமேயானால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்.
6. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப் புள்ளிகளையோ எவ்வித காரணம் கூறாமல் ஏற்றுக்கொள்ளப்படவோ அல்லது நிராகரிக்கவோ பேரூராட்சி செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.
7. ஒப்பந்ததாரர் தம்மால் அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை எவ்வித காரணமும் இல்லாமல் விலக்கிக் கொண்டால் (ஒப்பந்தபுள்ளியை ஏற்றுக் கொள்பவர் முடிவு செய்ய வேண்டும்) அவரால் பின்னர் அளிக்கும் ஒப்பந்தபுள்ளியை எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்க நேரிடும்.
8. மேலே கண்டுள்ள 1 முதல் 7 வரையுள்ள பத்திகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்ததாரர்களின் வைப்புத் தொகை எவ்வித முன்னறிவிப்புமின்றி பறிமுதல் செய்யப்படும்.
9. வரப்பெற்று முடிவு செய்யப்பட்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை இப்பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரம் பெற்று வேலை உத்திரவு வழங்கப்படும்.
10. குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் ரூ.100/- மதிப்புள்ள முத்திரைத் தாளில் உடன்படிக்கை எழுதித்தர வேண்டும்.
11. வேலை முடிக்கப்படவேண்டிய கால அளவு 6 மாதங்களாகும். அவ்வாறு வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்து ஒப்படைக்கப்படவில்லை எனில் வேலையை ரத்துச் செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எல்லா இழப்புக்கும் ஒப்பந்ததாரரே முழுப் பொறுப்பாவார்.
12. குறிப்பிட்ட தேதிக்குள் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்ததாரர் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித் தொகையை பறிமுதல் செய்ததாகக் கருதப்பட்டு, பேரூராட்சியின் பொதுநிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் மறுஒப்பந்தப்புள்ளி கோரி பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், முந்தைய ஒப்பந்ததாரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.
13. கட்டுமான வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருள்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால், ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன், பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் தரம்வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில், ஒப்பந்ததாரர் சேகரித்தல் வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள், பேரூராட்சிப் பொருட்களாக கருதி அப்புறப்படுத்தப்படும்.
14. யாருடைய ஒப்பந்தபுள்ளியை ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித் தொகை காசோலையாக விண்ணப்பத்தின் பேரில் திருப்பிக்கொடுக்கப்படும்

15. பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிக்கும் முன்னரும், பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதும், பணி முடிந்த பின்னரும் ஆகிய மூன்று நிலைகளிலும் ஒரே இடத்தை சுட்டிக்காட்டும் படியாக புகைப்படம் எடுக்கப்படவேண்டும்.

16. வேலையை முடித்த பின்னர் பட்டியல் கீழ்க்காணும் தொகைகள் கழித்துக் கொள்ளப்பட்டு, மீதித் தொகையை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| அ) பணித்தரக் காப்புத் தொகை (PSD) | : | 5 % |
| ஆ) வருமானவரி (IT) | : | 2 % |
| இ) பொருட்கள் மற்றும் சேவை வரி (GST) | : | 2 % |
| ஈ) கட்டுமான தொழிலாளர் சந்தா (MWF) | : | 1 % |

17. தொடர்புடைய வேலைக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கைத்தடை ஏதும் இல்லையென முடிவு தெரிந்த பின்னர் தான் அவ்வேலைக்கான ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்ட டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பித் தரப்படும்.

18. வேலை நடைபெறும் இடத்தில் பணியின் விவரம் அடங்கிய விளம்பரப்பலகை நிறுவப்படுதல் வேண்டும்.

19. இப்பணி தொடர்பாக மத்திய மாநில அரசுகள் பிறப்பிக்கும் அனைத்து உத்திரவுகளுக்கும் கட்டுப்பட்டு பணியினை முடிக்க வேண்டும்.

20. **E–Tender** மூலம் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பதிவிறக்கம் செய்து ஒப்பந்ததாரர் மூலம் தரப்படும் ஒப்பந்தப்புள்ளிக்கு மேற்காணும் அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்.

21. மதிப்பீட்டுத் தொகையில் 5 சதவீதத் தொகைக்கு வங்கி உத்திரவாதச் சான்று இணைக்க வேண்டும் அல்லது கூடுதல் காப்புத் தொகையினை ரொக்கமாக இவ்வலுவலகத்தில் செலுத்திய பிறகு வேலையை ஆரம்பிக்க வேண்டும்.

22. இத்திட்டப் பணி முடிக்கப்பட்டவுடன், மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை, இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரே தனது சொந்த செலவில் சீரமைக்க வேண்டும்.

23. Engineering Manual–படி பணிக்கான ஒப்பந்த காலத்திற்குள் பணியினை ஒப்பந்தகாரர் மந்தமான முறையில் மிக மெதுவாக பணியில் முன்னேற்றம் காண்பிக்கும் பட்சத்தில் (Penalty for slow progress) அபராதம் ஒப்பந்த மதிப்பில் 5% விதிக்கப்படும்

24. பணியின் ஒப்பந்த மதிப்பில் (Contract Value) 2 சதவிதம் முன் வைப்புத் தொகையாக (EMD) செலுத்த வேண்டும்.

25. கூடுதல் விபரங்களை இணையதள ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் கண்டு அதனை பின்பற்ற வேண்டும். இணையதளத்தில் வெளியிட்டுள்ள ஒப்பந்த ஆவணம் இறுதியானதாகும்.

26. இதர விபரங்களை அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம்.

**முக்கிய தினங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்ததாரர்கள் முன் கலந்தாய்வு கூட்டம் (Pre–Bid Meeting) நடைபெறும் நாள் மற்றும் நேரம் | **17.06.2022**<br>**முற்பகல் 11.00 மணி** |
| 2. | ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் ஆவணங்களை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டிய கடைசி தேதி மற்றும் நேரம் | **23.06.2022**<br>**பிற்பகல் 5.00 மணி** |
| 3. | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் (இணையதளம் மூலம் வழங்கப்படும் ஒப்பந்தப்புள்ளியையும் சேர்த்து) | **24.06.2022**<br>**பிற்பகல் 3.00 மணி** |

| | | |
|---|---|---|
| 4. | ஒப்பந்தப்புள்ளி திறப்பு நாள் மற்றும் நேரம் | **24.06.2022**<br>**பிற்பகல் 3.30 மணி** |

27. மேற்கண்ட தினங்களில் எதிர்பாராமல் அரசு விடுமுறை ஏதேனும் அறிவிக்கப்பட்டால் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பெற்றுக்கொள்வது மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பு அடுத்த வேலை நாட்களில் நடைபெறும்.

**செயல் அலுவலர்,**
வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சி,
சேலம் மாவட்டம்.

**பெறுநர்**
பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்

**நகல்**

1. சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. சேலம் மாவட்டப் பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர்–1 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவி பொறியாளர், வாழப்பாடி பேரூராட்சி (தொகுப்பு) அவர்களுக்கு தகவலுக்காக,
4. அலுவலக விளம்பர பலகைக்கு